<u>2026 பிப்ரவரி மாதம் 09– ஆம் தேதி திங்கட்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>O.S. நெம்பர் : 108/2020</u>

O.S. No.: 108/2020 – அழகர்சாமி PW1 09.02.2026

த/பெ.ராமசாமி

<u>சாட்சி அழைக்கப்பட்டு 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

1. நான் 1ம் பிரதிவாதி நீரஜ் மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பணம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றும், ஆண்டு வருமானம் என்ன என்பது குறித்து நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் விவசாயி, அதற்கான ஆவணம் இல்லை. 1ம் பிரதிவாதியை எப்படி எனக்கு தெரியும் என்றால் சுமார் ½ கி.மீ தள்ளி அவர் இருப்பார், டீ கடையில் நாங்கள் சந்திக்கும் பழக்கம் உண்டு. 1ம் பிரதிவாதிக்கும் எனக்கும் ஏற்கனவே கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இல்லை. 19.12.2018ம் தேதி நான் 1ம் பிரதிவாதியுடன் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்தம் எங்கு வைத்து யாரால் எழுதப்பட்டது என்றால் பழைய பத்திர அலுவலகத்தில் மரத்தடியில் வைத்து சீதாவின் அண்ணனால் எழுதப்பட்டது. அது பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான்.

2. மேற்படி ஆவணத்தின்படி ரூ.25 லட்சத்தை அன்றையே தேதியில் கொடுத்தேன் என்றால் சரிதான், அந்த பணத்தை எங்கு வைத்து ரொக்கப் பணத்தை கொடுத்தேன் என்றால் பத்திர அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டு, வீட்டிற்கு வந்து பணத்தை 1ம் பிரதிவாதியிடம் ரொக்கமாக கொடுத்தேன். ரூ.25 லட்சம் பணம் கொடுத்ததற்கு ஆதாரம் உள்ளதா என்றால்

சாட்சி கையொப்பமிட்டவர்கள் முன்னிலையில் பணத்தைக் கொடுத்தேன், என்சார்பாக ஓர் சாட்சி, 1ம் பிரதிவாதிக்கு சார்பாக ஓர் சாட்சியும், ஓர் கொத்தனாரும் இருந்தார்கள். ரூ.25 லட்சம் பணம் கொடுக்கும் சமயத்தில் எனக்கு வருமானம் வந்ததாக வருமானத்துறையில் கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை, ராஜ் ஸ்ரீ சர்க்கரை ஆலைக்கு கரும்பு அனுப்பி வருகிறேன். ராஜ் ஸ்ரீ சர்க்கரை ஆலைக்கு கரும்பு அனுப்பியதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

3. ரூ.25 லட்சம் ரொக்க பணப்பரிவர்த்தனை செய்யக்கூடாது என்று விதி உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உண்மையில் 1ம் பிரதிவாதிக்கு ரூ.15 லட்சம் கடனாக கொடுத்தேன் என்றாலும், கடனிற்கு ஆதரவாக எழுதப்பட்ட கிரைய ஒப்பந்தம் என்றால் சரியல்ல. ஆவண எண்.9403/2018 கிரைய ஒப்பந்த ஆவணம் கடனிற்காக எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் முன்தொகை ரூ.25 லட்சம் கொடுத்ததாக ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல. 18.12.2019ம் தேதி ஓர் பத்திரம் எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான், அந்த பத்திரத்தின்படி 1ம் பிரதிவாதி எனக்கு ரூ.7 லட்சம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். நாங்கள் கிரைய ஒப்பந்தம் செய்த ஒரு வருட காலத்திற்குள் நான் மீதக் கிரையத் தொகையை ரூ.15 லட்சத்தைக் கொடுக்க தயாராக இருந்தேனா என்றால் தயாராக இருந்தேன்.

4. தாவா சொத்தின் மதிப்பு ஒப்பந்தம் ஏற்படுத்திய காலக்கட்டத்தில் ரூ.2 கோடி மதிப்பு பெறும் என்றாலும், குறைத்து ஒப்பந்தத்தில் காட்டியிருந்தேன் என்றால் சரியல்ல. நாங்கள் கிரைய ஒப்பந்தம் செய்த ஒரு வருட காலத்திற்குள் நான் மீதக் கிரையத் தொகையை ரூ.15 லட்சத்தைக்

கொடுத்து கிரையம் முடித்துக்கொள்ள 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் அனுப்பவில்லை, நேரடியாக பலமுறை கேட்டும் அவர் காலங்கடத்தி வந்தார். 1ம் பிரதிவாதி கிரையம் கொடுக்க தயாராக இல்லாததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பமிட்டவர்கள் உள்ளார்கள். 18.12.2019ம் தேதி கொடுத்த ரூ.7 லட்சத்தை பெற்றவுடன் மீதித்தொகையை செலுத்த 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை, இரண்டு நாட்களில் கொடுப்பதாக கூறினார்.

5. வா.சா.ஆ.3ல் இரண்டு நாட்களில் ரூ.18 லட்சத்தை கொடுப்பதாக நானாகவே எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் 1வது மாதம் 2020ம் வருடம் வாங்கப்பட்ட ஆவணத்தில் சுமார் 10 நாட்கள் கழித்து ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றாலும், அது நானாக எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என்னிடம் வாங்கிய ரூ.15 லட்சத்தில் ரூ.7 லட்சத்தை என்றாலும், மீதி தொகை அவர் கொடுக்க வேண்டிய தொகை ரூ.8 லட்சம் என்றால் சரியல்ல. மீதித் தொகை ரூ.8 லட்சத்தையும் 1 மாத காலத்திற்குள் 1ம் பிரதிவாதி மார்ச் மாதம் 2020ம் வருடத்தில் எனக்கு செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அவர் பெற்ற கடனை செலுத்திவிட்டார் என்றாலும், ஆகையால் 2 முதல் 4 ம் பிரதிவாதிகள் எந்த தொகையும் செலுத்த வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல.

6. 2ம் பிரதிவாதியும், அவரது இளவர் பிள்ளைகளும் கஷ்ட ஜீவனம் செய்துவருவதால் மோசடியாக அவர்களிடம் பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. நான்

கேட்டுள்ள வட்டி விகிதம் சட்டத்திற்கு விரோதமாக அதிக வட்டி கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு 2 முதல் 4 பிரதிவாதிகளை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு தீர்ப்பு அவர்களை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இளவரின் நலனுக்காகவும், சவரட்சனைக்காகவும் இந்த தொகை செலவிடப்படாததால் இளவர்களை பொறுத்து இவ்வழக்கு தீர்ப்பு கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 09.02.2026 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.09 18:01:15 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
09.02.2026.